## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :–

### வரலாறு

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு அ) 1870 ஆ) 1872 இ) 1780 ஈ) 1782

2. மூலப் பொருட்களின் தேவையை அதிகப்படியாக உருவாக்கியது

அ) தொழிற் புரட்சி ஆ) தகவல் தொழில் நுட்ப புரட்சி இ) பிரெஞ்சு புரட்சி ஈ) வேளாண்மை புரட்சி

3. 1870 முதல் 1945 வரை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய ஏகாதிபத்தியக் கொள்கை

அ) நவீன ஏகாதிபத்தியம் ஆ) அரசியல் ஏகாதிபத்தியம் இ) புதிய ஏகாதிபத்தியம் ஈ) இராணுவ ஏகாதிபத்தியம்

4. பொருட்களின் போக்குவரத்தை அதிகரிக்கச் செய்தது

அ) இரயில்வே ஆ) சாலை இ) வான் ஈ) நீர்

5. ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) கி.பி. 1600 ஆ) கி.பி. 1664 இ) கி.பி.1644 ஈ) கி.பி.1700

6. பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக் குழுவை நிறுவியவர்

அ) 14–ம் லூயி ஆ) கால்பர்ட் இ) 16–ம் லூயி ஈ) டிபிராஸா

7. சீனக் குடியரசை உருவாக்கியவர்

அ) டாக்டர் சன்யாட்சென் ஆ) சூ–யென்–லாய் இ) மாசேத்துங் ஈ) சியான்கே ஷெக்

8. கெய்சர் இரண்டாம் வில்லியம் கடற் படையை நிறுத்தியிருந்த இடம்

அ) ஹெலிகோலாந்து ஆ) ஆலாந்து இ) ஜீலாந்து ஈ) அயர்லாந்து

9. ஆஸ்திரிய பட்டத்து இளவரசர்

அ) பிரான்சிஸ் பெர்டினான்ட் ஆ) பிரான்சிஸ் டியூக இ) பிரான்சிஸ டி லெசப்ஸ் ஈ) பிரான்சிஸ் பேயாகன்

10. ஜெர்மனி, பிரான்சின் மீது படையெடுக்க இதன் வழியாகச் சென்றது

அ) நெதர்லாந்து ஆ) லக்ஸம்பர்க் இ) ரைன்லாந்து ஈ) பெல்ஜியம்

11. ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்காவின் புகழ் பெற்ற வணிகக் கப்பல்

அ) லூப்டாப் ஆ) ராயல் இ) லூாசிடானியா ஈ) பெர்லின்

12. ரஷ்யாவில் சார் வம்ச ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தவர்

அ) லெனின் ஆ) காரல் மார்க்ஸ் இ) மார்டோவ் ஈ) ஸ்டாலின்

13. ஜெர்மானிய கப்பற் படை தகர்க்கப்பட்ட கடல் போர்

அ) ஜட்லாந்து ஆ) டாகர் பாங்க் இ) வடகடல் ஈ) பால்டிக் கடல்

14. முதல் உலகப் போரை முடிவுக்கு கொண்டு வந்தது

அ) லண்டன் அமைதி மாநாடு ஈ) ரோம் அமைதி மாநாடு இ) பெர்லின் அமைதி மாநாடு ஈ) பாரீஸ் அமைதி மாநாடு

15. சர்வதேச சங்கம் அதிகாரபூர்வமாக தோன்றிய நாள்

அ) மார்ச் 7, 1930 ஆ) மார்ச் 2, 1928 இ) ஜனவரி 20, 1920 ஈ) ஜனவரி 20, 1924

16. பொருளாதார பெரும் மந்தம் தோன்றிய நாடு

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) பிரான்ஸ் ஈ) ஜெர்மனி

17. 1929–ல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்

அ) தியோடர் ரூஸ்வெல்ட் ஆ) உட்ரோ வில்சன் இ) ஹெர்பர்ட் ஹூவர் ஈ) எப்.டி. ரூஸ்வெல்ட்

18. அமெரிக்கர்கள் பேரார்வத்துடன் ஈடுபட்ட துறை

அ) வணிகம் ஆ) சூதாட்டம் இ) சினிமா ஈ) பங்கு வணிகச் சந்தை

19. அமெரிக்க பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது

அ) 1930 ஆ) 1940 இ) 1950 ஈ) 1945

20. பாசிச கட்சியை தோற்றுவித்தவர்

அ) ஹிட்லர் ஆ) முசோலினி இ)ஸ்டாலின் ஈ) லெனின்

21. முசோலினியால் எற்படுத்தப்பட்டது

அ) ஜனநாயக ஆட்சி ஆ) கம்யூனிச ஆட்சி இ) நிலையான ஆட்சி ஈ) குடியரசுஆட்சி

22.முசோலினியுடன் பொதுக் கொள்கையை எற்படுத்திக் கொண்டவர்

அ) சர்ச்சில் ஆ) ஹிட்லர் இ) ஸ்டாலின் ஈ) லெனின்

23. சர்வதேச சங்கத்திலிருந்து முசோலினி விலகிய ஆண்டு

அ) 1931 ஆ) 1932 இ) 1935 ஈ) 1937

24. கூட்டுப் படை வளம் மிக்க இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது

அ) ரைன்லாந்து ஆ) சூடட்டன்லாந்து இ) கிரீன்லாந்து ஈ) பின்லாந்து

25. ஹிட்லர், வியன்னாவில் பணியாற்றியது

அ) பெயிண்டர் ஆ) தையற்காரர் இ) ஆசிரியர் ஈ) வங்கி ஊழியர்

26. 1941 –ம் ஆண்டு ஹிட்லர் படையெடுத்த நாடு

அ) ரஷ்யா ஆ) பிரான்சு இ) பிரஷ்யா ஈ) பாரசீகம்

27. கூட்டு நாடுகள்___________ நாட்டின் வருகையால் வலிமை பெற்றன.

அ) ஆஸ்திரியா ஆ) அமெரிக்கா இ) பின்லாந்து ஈ) போலந்து

28. இரண்டாம் உலகப் போருக்கு முக்கிய காரணமாக அமைந்த உடன்படிக்கை

அ) வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆ) ரோம் உடன்படிக்கை

இ) லண்டன் உடன்படிக்கை ஈ) ஆக்ஸ்லா சாபேல் உடன்படிக்கை

29. பிரான்சுக்குக் கொடுக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கம்

அ) ஜாரியா ஆ) சார்இ) பொகாரோ ஈ) ராணிகஞ்ச்

30. முதல் உலகப் போருக்குப் பின் வல்லரசாக எழுச்சி பெற்ற நாடு

அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) கொரியா

31. சண்டையும், கைப்பற்றுதலும் என்ற கொள்கையைப் பின்பற்றியவர்கள்

அ) மிதவாதிகள் ஆ) தீவிரவாதிகள் இ) சர்வாதிகாரி ஈ) புரட்சியாளர்கள்

32. இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர்

அ) சர். வின்சன்ட் சர்ச்சில் ஆ) கிளமெண்டு அட்லி இ) தாட்சர் ஈ) லாயிட்ஸ் ஜார்ஜ்

33. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: அ) 1955 ஆ) 1945 இ) 1965 ஈ) 1975

34. ஐ. நா.வின் நிரந்தர அவை

அ) பொது சபை ஆ) தலைமைச் செயலகம் இ) பாதுகாப்பு அவை ஈ) தர்மகர்த்தா அவை

35. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ளது

அ) திஹேக் ஆ) பெர்லின் இ) ரோம் ஈ) டோக்கியோ

36. ஐ. நா. வின் பொன் விழா ஆண்டு

அ) 1985 ஆ) 2005 இ) 1995 ஈ) 1975

37. ஐரோப்பிய ஒன்றிய மன்றம், சில நேரங்களில் அழைக்கப்படுவது

அ) வணிகர் ஒன்றியம் ஆ) விவசாயிகள் ஒன்றியம இ) நுகர்வோர் ஒன்றியம் ஈ) மந்திரிகளின் கூட்டமைப்பு

38. ஐரோப்பிய கூட்டமைப்பின் பொருளாதாரக் கொள்கைகளை கவனித்து வருவது

அ) மத்திய வங்கி ஆ) ரிசர்வ் வங்கி இ) ஸ்டேட் வங்கி ஈ) ஸ்விஸ் வங்கி

39. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயம்

அ) டாலர் ஆ) யென் இ) யூரோ ஈ) பவுண்டு

40. ஐரோப்பிய ஒன்றியம் வலுவான உறவை எற்படுத்திக் கொண்டிருப்பது

அ) அமெரிக்கா ஆ) ரஷ்யா இ) ஐ.நா. சபை ஈ) ஐக்கிய அரபு நாடுகள்

41. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சியை ஆங்கில வரலாற்று அறிஞர்கள் அழைத்தது

அ) படைவீரர் கலகம் ஆ) பெரும் கலகம் இ) இந்திய சுதந்திரப் போர் ஈ) சுதந்திரப் போராட்டம்

42. இந்திய வரலாற்று அறிஞர்கள் 1857–ம் ஆண்டு பெரும் புரட்சியை அழைத்தது

அ) சிப்பாய் கலகம் ஆ) பெரும் புரட்சி இ) முதல் இந்திய சுதந்திரப்போா ஈ) படைவீரர் கலகம்

43. 1857–ம் ஆண்டு பெரும் புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்

அ) லிட்டன் பிரபு ஆ) ரிப்பன் பிரபு இ) கானிங் பிரபு ஈ) வெல்ஸில்லி பிரபு

44. பொது இராணுவப் பணியாளர் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

அ) 1856 ஆ) 1857 இ) 1858 ஈ) 1859

45. முதன் முதலில் புரட்சி வெடித்தது

அ) மீரட் ஆ) ப்ரெயிலி இ) பாரக்பூர் ஈ) கான்பூர்

46. அயோத்தி நவாப்பின் மனைவி

அ) மும்தாஜ் ஆ) பாத்திமா பேகம் இ) பேகம் ஹஜ்ரத்மகால் ஈ) ரசியா சுல்தானா

47. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

அ) இராஜாராம் மோகன்ராய் ஆ) தயானந்த சரஸ்வதி இ) கேசவ் சந்திரசென் ஈ) தேவேந்திரநாத் தாகூர்

48. சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்டது

அ) பிரம்ம சமாஜம் ஆ) ஆரிய சமாஜம் இ) பிரார்த்தன சமாஜம் ஈ) அலிகார் இயக்கம்

49. இராம கிருஷ்ண மடத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) காஞ்சீபுரம் ஆ) பேலூர் இ) மேலூர் ஈ) ஹம்பி

50. சர் சையது அகமதுகான் தொடங்கியது

அ) அலிகார் இயக்கம் ஆ) பிரம்ம ஞான சபை இ) சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ஈ) முஸ்லீம் லீக்

51. கேரளாவைச் சேர்ந்த சிறந்த சமூக சீர்திருத்தவாதி

அ) ஸ்ரீ நாராயண குரு ஆ) குரு பிரசாத் இ) குரு நானக் ஈ) குரு சாயி

52. பிரிட்டிஷார் ஒன்றுபட்ட நாட்டை உருவாக்கியது

அ) எகாதிபத்தியம் ஆ) அரசியல் இ) படையெடுப்பு ஈ) பேச்சு வார்த்தை

53. படித்த இந்தியர்களின் மொழியாக அமைந்தது

அ) பிரெஞ்சு ஆ) ஆங்கிலம் இ) இந்தி ஈ) வங்காளம்

54. சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது

அ) தேசியம் ஆ) புரட்சி இ) கலகம் ஈ) கிளர்ச்சி

55. காங்கிரசில் பிளவை எற்படுத்திய மாநாடு

அ) சூரத் ஆ) லாகூர் இ) திரிபுரா ஈ) மதராஸ்

56. பம்பாயில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர்

அ) நேரு ஆ) திருமதி. அன்னி பெசன்ட் இ) திலகர் ஈ) பாரதியார்

57. சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜி உபயோகித்த புதிய யுக்திமுறை

அ) சத்தியா கிரகம் ஆ) வெளிப்படை கொள்கை இ) நீண்ட பயணம் ஈ) வன்முறை

58. இந்திய அரசியலமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு

அ) ஜனவரி 26, 1950 ஆ) பிப்வரி 26, 1950 இ) ஆகஸ்ட் 26, 1950 ஈ) மார்ச் 26, 1950

59. இரண்டாம் உலகப் போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர்

அ) கானிங் பிரபு ஆ) டல்ஹவுசி இ) லின் லித்கோ ஈ) லிட்டன் பிரபு

60. இந்தியாவின் முதல் மற்றும் கடைசி கவர்னர் ஜெனரல்

அ) மௌண்ட் பேட்டன் பிரபு ஆ) நேரு இ) இராஜகோபாலாச்சாரி ஈ) காமராஜர்

61. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர்

அ) டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் ஆ) இராஜேந்திர பிரசாத் இ) இராஜாஜி ஈ) சர்தார் வல்லபாய் படேல்

62. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்

அ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஆ) காந்திஜி இ) டாக்டர் இராதாகிருஷ்ணன ஈ) சத்தியமூர்த்தி

63. வேலூரில் இந்திய வீர்களை ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படத் தூண்டியவர்

அ) ஹைதர் அலி ஆ) திப்பு சுல்தானின் மகன்கள் இ) சிவாஜியின் மகன்கள் ஈ) ஷாஜஹானின் மகன்கள்

64. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தியவர்

அ) டி.எஸ். இராஜன் ஆ) பக்தவத்சலம் இ) இராஜகோபாலாச்சாரி ஈ) வ.உ.சி.

65. பிரிட்டிஷாரின் கைது ஆணைக்கு எதிராக பாரதியார் தப்பியோடியது

அ) சென்னை ஆ) பெங்களூர் இ) ஹைதராபாத் ஈ) பாண்டிச்சேரி

66. வைக்கம் அமைந்துள்ள இடம் அ) தமிழ்நாடு ஆ) ஆந்திர பிரதேசம் இ) கர்நாடகம் ஈ) கேரளா

67. டாக்டர். முத்துலட்சுமியின் சீரிய முயற்சியால் புற்று நோய் மருத்துவ மனை தொடங்கப் பட்ட இடம் அ) அண்ணா நகர் ஆ) செங்கல்பட்டு இ) காஞ்சிபுரம் ஈ) அடையார்

68. டாக்டர் முத்துலட்சுமியால் தொடங்கப்பட்ட அனாதை இல்லம்

அ) அன்பு இல்லம் ஆ) சரஸ்வதி இல்லம் இ) அவ்வை இல்லம் ஈ) லட்சுமி இல்லம்

## புவியியல்

69. இந்தியாவிற்கு __________________யில் வங்களா விரிகுடா அமைந்துள்ளது.

அ) மேற்கு திசை ஆ) தெற்கு திசை இ) தென்கிழக்கு திசை ஈ) தென்மேற்கு திசை

70. பாக் நீர் சந்தி____________________வை இந்தியாவிலிருந்து பிரிக்கிறது.

அ) ஸ்ரீலங்கா ஆ) மியான்மார் இ) மாலத் தீவுகள் ஈ) லட்சத் தீவுகள்

71. இந்தியாவின் நடுவே செல்லும் மிக முக்கிய தீர்க்க கோடு _________ நடுவே செல்கிறது.

அ) அகமதாபாத் ஆ) அலகாபாத் இ) ஹைதராபாத் ஈ) அவுரங்காபாத்

72. இந்தியாவின் மிக உயரமான சிகரம்

அ) எவரெஸ்ட் ஆ) காட்வின் ஆஸ்டின் இ) கஞ்சன்ஜங்கா ஈ) தவளகிரி

73. கங்கை ஆற்றின் பிறப்பிடம்

அ) யமுநோத்திரி ஆ) சியாச்சின் இ) கங்கோத்ரி ஈ) காரக்கோரம்

74. இமய மலைகள் ______________என அழைக்கப்படுகின்றன.

அ) பனி உறைவிடம் ஆ) இமாச்சல் இ) சிவாளிக் ஈ)இமாத்ரி

75. இந்தியாவில் நிலவுவது ______________கால நிலை

அ) மிதவெட்ப மண்டல ஆ) வெப்ப மண்டல பருவக்காற்று இ) வெப்ப மண்டல ஈ) குளிர்

76. கடற்கரை பகுதிகளில் நிலவுவது __________ காலநிலை.

அ கண்ட ஆ) சமமான இ) ஈரப்பத ஈ) வெப்ப

77. தென்மேற்கு பருவகாற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைகள்

அ) ) ஆரவல்லி ஆ) சாத்பூரா இ) விந்தியா ஈ) மைக்காலா

78. வறண்ட நிலப் பகுதியில் காணப்படும் மண் _________ஆகும்.

அ) பாலை மண் ஆ) சூலை மண் இ) கருப்பு மண் ஈ) வண்டல் மண்

79. பருவக் காற்றுக் காடுகள் _______ என்றும் அழைக்கப்படுகின்றது.

அ) அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் இ) இலையுதிர் காடுகள்

இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக் காடுகள்

80. மோனோசைட் மணலில் காணப்படும் தாது அ) எண்ணெய் ஆ) யுரேனியம் இ)தோரியம் ஈ) நிலக்கரி

81. நெல் அதிகமாக விளையும் மண்

அ) கரிசல் மண் ஆ) செம்மண் இ) வண்டல் மண் ஈ) சரளை மண்

82. வறட்சியிலும் வளரும் பயிர் அ) நெல் ஆ) கோதுமை இ) சணல் ஈ) தினை வகை

83. பருத்தி ஒரு அ) உணவுப் பயிர் ஆ) பணப் பயிர் இ) தோட்டப் பயிர் ஈ) தினைப் பயிர்

84. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுவது

அ) டெல்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) கொல்கொத்தா

85. டாடா எஃகு நிறுவனம் அமைந்துள்ள இடம்

அ) துர்க்காபூர் ஆ) பர்ன்பூர் இ) ஜாம்ஷெட்பூர் ஈ) பிளாய்

86. சோடா நாகபுரி பீடபூமி____________ வளத்திற்கு புகழ் பெற்றது.

அ) இயற்கை தாவரம் ஆ) கனிம வளம் இ) வண்டல் மண் ஈ) பருத்தி

87. மின்னியல் தலைநகரம் என அழைக்கப்படுவது

அ) கான்பூர் ஆ) கோயம்புத்தூர் இ) பெங்களூர் ஈ) மதுரை

88. ஓடைகளிலும், எரிகளிலும் இயற்கை சத்து அதிகரிப்பது

அ) நீர் மாசடைதல் ஆ) மிகையூட்ட வளமுறுதல் இ) காற்று மாசடைதல் ஈ) ஒலி மாசடைதல்

89. இயற்கை காற்று மாசடைவதற்கு முக்கிய காரணம்

அ) வாகன புகை ஆ) எரிமலை வெடிப்பு இ) அனல் மின்சக்தி நிலையம் ஈ) நீர் மின்சக்தி நிலையம்

90. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம்

அ) பல்கிளை வணிகம் ஆ) பன்னாட்டு வணிகம் இ) உள்நாட்டு வணிகம் ஈ) பண்ட மாற்று வணிகம்

91. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து

அ) வான்வெளி ஆ) சாலை வழி இ) நீர் வழி ஈ) குழாய் வழி

92. இந்திய இரயில் போக்குவரத்தின் தலைமையகம் உள்ள இடம்

அ) மும்பை ஆ) டெல்லி இ) நாக்பூர் ஈ) திருச்சி

93. மின் காந்த பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி

அ) இலக்கு ஆ) உணரி இ) பொருள் ஈ) புகைப்படக் கருவி

## குடிமையியல்

94. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையை கொண்டிருப்பது

அ) போர் ஆ) அமைதி இ) அன்பு ஈ) பகைமை

95. இன ஒதுக்கல் கொள்கை முடிவிற்கு வந்த ஆண்டு

அ) 1990 ஆ) 1991 இ) 1890 ஈ) 1989

96. சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளர்

அ) ஜின்னா ஆ) ஆஷான் இ) கோபி ஆனன் ஈ) காந்தி

97. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை

அ) குடியாட்சி ஆ) உயர்குடியாட்சி இ) மக்களாட்சி ஈ) சர்வதிகாரம்

98. நேரடி மக்களாட்சி பழங்காலத்தில் நடைமுறையில் இருந்தது

அ) கிரீஸ் ஆ) இத்தாலி இ) சார்டினியா ஈ) சைப்ரஸ்

99. எதிர்கட்சி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து

அ) காபினட் அமைச்சர் ஆ) இணை அமைச்சர் இ) மாநில அமைச்சர் ஈ) அமைச்சரவை அமைச்சர்

100. தேர்தலில் போட்டியிட தேவையான வயது

அ) 20 ஆ) 18 இ) 25 ஈ) 35

101. மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட அமைப்பு

அ) சட்டமன்றம் ஆ) உச்ச நீதிமன்றம் இ) பொதுக் கட்சிகள் அவை ஈ) பாராளுமன்றம்

102. தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

அ) மதராஸ் ஆ) மும்பை இ) முராதாபாத் ஈ) டெல்லி

103. நமது நாட்டின் பழம் பெரும் சமயம்

அ) வேத சமயம் ஆ) கிறித்துவ சமயம் இ) இஸ்லாம் ஈ) ஜொராஸ்டிரிய சமயம்

104. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக மொழிகள்

அ) 25 ஆ) 23 இ) 22 ஈ) 28

105. மொழி என்பது அ) போக்குவரத்து ஆ) நீர் பாசனம் இ) இணைப்பு கருவி ஈ) உணர்வுப்பூர்வமானது

106. புத்த பூர்ணிமா கொண்டாடுபவர்கள்

அ) இந்தியர்கள் ஆ) முஸ்லீம்கள் இ) சமணர்கள் ஈ) புத்த மதத்தினர்

107. ஒரு பொருளை முழுமையாக பயன்படுத்துவோர்

அ) உற்பத்தியாளர் ஆ) நுகர்வோர் இ)கடைக்காரர் ஈ) விவசாயி

108. தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

அ) அக்டோபர் 12, 2005 ஆ) அக்டோபர் 21, 2005 இ) அக்டோபர் 12, 2006 ஈ) அக்டோபர் 21, 2006

109. உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுவது

அ) மார்ச் 15 ஆ) மார்ச் 16 இ) மார்ச் 14 ஈ) மார்ச் 11

## பொருளியியல்

110. நாட்டு வருமானத்தின் மற்றொரு பெயர்

அ) உண்மை வருமானம் ஆ) பண வருமானம் இ) மொத்த நாட்டு உற்பத்தி ஈ) பெயரளவு வருமானம்

111. நாட்டு வருமானத்தை கணக்கிடும் வழிமுறைகள்

அ) 2 முறைகள் ஆ) 3 முறைகள் இ) 4 முறைகள் ஈ) 5 முறைகள்

112. இந்தியாவின் தலா வருமானம்

அ) 220 டாலர்கள் ஆ) 950 டாலர்கள் இ) 2930 டாலர்கள் ஈ) 600 டாலர்கள்

113. முதன்மைத் துறை என்பது

அ) வணிகம் ஆ) கட்டமைப்பு துறை இ) வேளாண்மைத் துறை ஈ) தொலைத் தொடர்பு துறை

114. தலா வருமானம் சுட்டிக் காட்டுவது

அ) மக்களின் செல்வ நிலையை ஆ) மக்களின் எழ்மை நிலையை

இ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஈ) மக்களின் கல்வி நிலையை

115. இந்திய நாட்டு வருமானத்தில் முதன்மைத் துறையின் பங்களிப்பு

அ) 15. 8 % ஆ) 25.8 % இ) 58.4 % ஈ) 12.8 %

116. இந்திய திட்டக் குழுவின் தலைவர்

அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) நிதியமைச்சர் ஈ) குடியரசுத் துணைத் தலைவர்

117. இந்தியாவில் திட்டக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு

அ) 1962 ஆ) 1950 இ) 1956 ஈ) 1949

118. இந்தியப் பிரதமர் நேரு இந்தியப் பொருளாதாரம் _______அமைய விரும்பினர்

அ) கலப்பு பொருளாதாரமாக ஆ) சமதர்ம பொருளாதாரமாக

இ) முதலாளித்துவ பொருளாதாரமாக ஈ) பணப் பொருளாதாரமாக

119. பசுமைப் புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

அ) 1967 ஆ) 1977 இ) 1987 ஈ) 1957

120.பூமிதான இயக்கத்தினை தொடங்கியவர்

அ) ஜெயப்பிரகாஷ்நாராயண் ஆ) ஜவகர்லால் நேரு இ) ஆச்சாரியா வினோபாவே ஈ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

121. பதினோறாவது ஐந்தாண்டுத் திடடக் காலம்

அ) 1956–61 ஆ) 1997–2002 இ)2002–2007 ஈ) 2007–2012

II. பொருத்துக :–

1. கர்நாடகப் போர்கள் – ஆப்பிரிக்கா
2. இனவெறிக் கொள்கை – சீனா
3. பன்னாட்டு குடியேற்றம் – இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்க முடிவு
4. கிளமன்கோ – அமெரிக்கா
5. உட்ரோ வில்சன் – பிரான்சு

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 6. வெர்சேல்ஸ் உடன்படிக்கை | – | இத்தாலி |
| 7. செவ்ரேஸ் உடன்படிக்கை | – | ஆஸ்திரியா |
| 8. பொருளாதார பெரு மந்தம் | – | 1939 |
| 9. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி | – | பங்குச் சந்தைகளில் கடன் முதலீடு |
| 10. கருஞ்சட்டை | – | கடனுதவி |

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 11. ரோம் அணிவகுப்பு | – | எனது போராட்டம் |
| 12. கெஸ்டபோ | – | 1922 |
| 13. மெயின் காம்ப் | – | ஹிட்லரின் ரகசிய காவல் படை |
| 14. அழித்துப் பின் வாங்கும் கொள்கை | – | ஜெர்மனி |
| 15. லூப்டாப் | – | ரஷ்யா |

**பொருத்துக :–**

| | | |
|---|---|---|
| 16. நியூயார்க் | – | 1963 |
| 17. அணு சோதனை தடைச் சட்டம் | – | ஐ.நா. தலைமையகம் |
| 18. யூரோ | – | கான்பூர் |
| 19. மங்கள் பாண்டே | – | 2002 |
| 20. நானா சாகிப் | – | பாரக்பூர் |

**பொருத்துக:–**

| | | |
|---|---|---|
| 21. இராணி இலட்சுமி | – | மகா சாசனம் |
| 22. பெரும் புரட்சி | – | மத்திய இந்தியா |
| 23. விக்டோரிய மகாராணியின் பேரறிக்கை | – | 1857 |
| 24. நவீன இந்தியாவின் விடிவெள்ளி | – | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 25. இந்து சமயத்தின் மார்டின் லூதர் | – | இராஜாராம் மோகன்ராய் |

**பொருத்துக:–**

| | | |
|---|---|---|
| 26. நியூ இந்தியா | – | இராமலிங்க அடிகள் |
| 27. வள்ளலார் | – | அன்னி பெசன்ட் |
| 28. சுப்பிரமணிய பாரதி | – | இந்தியாவின் பிஸ்மார்க் |
| 29. கேசரி | – | நாட்டு பற்று மிக்க எழுத்தாளர் |
| 30. சர்தார் வல்லபாய் படேல் | – | பாலகங்காதர திலகர் |

**பொருத்துக: –**

| | | |
|---|---|---|
| 31. சௌரிசௌரா | – | கான் அப்துல் காபர்கான் |
| 32. பஞ்சாபின் சிங்கம் | – | உத்திரப் பிரதேசம் |
| 33. எல்லை காந்தி | – | சுயராஜ்ய கட்சி |
| 34. மோதிலால் நேரு | – | ஈ.வே. ராமசாமி |
| 35. வைக்கம் வீரர் | – | லாலா லஜபத்திராய் |

**பொருத்துக: –**

| | | |
|---|---|---|
| 36. புனித தலம் | – | மாளவம் |
| 37. தராய் | – | கேதார்நாத் |
| 38. லாவா பீடபூமி | – | சதுப்பு நிலம் |
| 39 நார்வெஸ்டர்ஸ் | – | மௌசின்ராம் |
| 40. அதிக மழை பெறும் பகுதி | – | வடகிழக்கு இந்தியாவின் தலக்காற்று |

**பொருத்துக: –**

| | | |
|---|---|---|
| 41. கரிசல் மண் | – | ஒரு வகை நிலக்கரி |
| 42. பழுப்பு நிலக்கரி | – | பருத்திப் பயிர் |
| 43. மாங்குரோவ் காடுகள் | – | உத்திரப் பிரதேசம் |
| 44. கோதுமை | – | சுந்தரவனம் |
| 45. கரும்பு | – | பஞ்சாப் |

**பொருத்துக: –**

| | | |
|---|---|---|
| 46. சணல் | – | தமிழ்நாடு |
| 47. மென்பொருள் தொழிலகம் | – | மேற்கு வங்காளம் |
| 48. இரும்பு எஃகு தொழிலகம் | – | மும்பை |
| 49. சர்க்கரை தொழிலகம் | – | சோட்டா நாகபுரி மண்டலம் |
| 50. மத்திய இரயில்வே | – | உத்திரப் பிரதேசம் |

**பொருத்துக: –**

| | | |
|---|---|---|
| 51. தெற்கு இரயில்வே | – | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 52. வடக்கு இரயில்வே | – | முறையான வான்வழி நிலற்படம் |
| 53. நில அளவை | – | சென்னை |
| 54. விமானம் | – | எராளமான வழிகள் |
| 55. டிஆர்ஓஎஸ் | – | டெல்லி |

## விடைகள்

**சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 1870
2. தொழிற் புரட்சி
3. புதிய ஏகாதிபத்தியம்
4. இரயில்வே
5. கி.பி. 1600
6. கால்பர்ட்
7. டாக்டர் சன்யாட்சென்
8. ஹலிகோலாந்து
9. பிரான்சிஸ் பெர்டினான்ட்
10. பெல்ஜியம்
11. லூசிட்டானியா
12. லெனின்
13. ஜுட்லாந்து
14. பாரிசு அமைதி மாநாடு
15. ஜனவரி 20, 1920
16. அமெரிக்கா
17. ஹெர்பர்ட் ஹீவர்
18. பங்கு வணிகச் சந்தை
19. 1940
20. முசோலினி
21. நிலையான ஆட்சி
22. ஹிட்லர்
23. 1937
24. ரைன்லாந்து
25. பெயிண்டர்
26. ரஷ்யாக்கா
27. அமெரிக்கா
28. வெர்சேல்ஸ் உடன்படிக்கை
29. சார்
30. ஜப்பான்
31. சர்வாதிகாரிகள்
32. சர் வின்ஸ்டன் சர்ச்சில்
33. 1945
34. பொதுச் சபை
35. திஹேக்
36. 1995
37. மந்திரிகளின் கூட்டமைப்பு
38. மத்திய வங்கி
39. யுரோ
40. ஐ.நா. சபை
41. படை வீரர் கலகம்
42. முதல் இந்திய சுதந்திரப் போர்
43. கானிங் பிரபு
44. 1856
45. மீரட்
46. பேகம் ஹஜ்ரத் மகால்
47. இராஜாராம் மோகன்ராய்
48. ஆர்ய சமாஜம்
49. பேலூர்
50. அலிகார் இயக்கம்
51. ஸ்ரீநாராயண குரு
52. ஏகாதிபத்தியம்
53.. ஆங்கிலம்
54. தேசியம்
55. சூரத்
56. திலகர்
57. சத்தியா கிரகம்
58. ஜனவரி 26, 1950
59. லின்லித்கோ
60. இராஜகோபாலாச்சாரி

61. சர்தார் வல்லபாய் படேல்
62. டாக்டர் இராஜேந்திர பிரசாத்
63. திப்பு சுல்தான் மகன்கள்
64. இராஜகோபாலாச்சாரி
65. பாண்டிச்சேரி
66. கேரளா
67. அடையார்
68. அவ்வை இல்லம்
69. தென்கிழக்கு திசை
70. ஸ்ரீலங்காவை
71. அலகாபாத் காட்வின் ஆஸ்டின்
72. காட்வின் ஆஸ்டின்
73. கங்கோத்ரி
74. பனி உறைவிடம்
75. வெப்ப மண்டல பருவக் காற்று காலநிலை
76. சமமான காலநிலை
77. ஆரவல்லி
78. பாலை மண்
79. இளையுதிர் காடுகள்
80. யுரேனியம்
81. வண்டல் மண்
82. தினை வகை.
83. பணப் பயிர்
84. மும்பை
85. ஜாம்ஜெட்பூர்
86. கனிம வளம்
87. பெங்களூர்
88. மிகையூட்ட வளமுறுதல்
89. வாகனப் புகை
90. உள்நாட்டு வணிகம்
91. சாலை வழி
92. டெல்லி
93. உணரி
94. அமைதி
95. 1890
96. ஆஷான்
97. மக்களாட்சி
98. கிரீஸ்
99. காபினட் அமைச்சர்
100. 25
101. பாராளுமன்றம்
102. புதுடெல்லி
103. வேத சமயம்
104. 22
105. இணைப்புக் கருவி
106. புத்த மதத்தினர்
107. நுகர்வோர்
108. அக்டோபர் 12, 2005
109. மார்ச் 15
110. மொத்த நாட்டு உற்பத்தி
111. 3 முறைகள்
112. 950 டாலர்கள்
113. வேளாண்மைத் துறை
114. மக்களின் வாழ்கைத் தரத்தை
115. 15.8 %
116. பிரதமர்
117. 1950
118. கலப்பு பொருளாதாரமாக அமைய விருப்பினார்
119. 1967
120. ஆச்சார்ய வினோபா பாவே
121. 2007 – 2012

**<u>பொருத்துக – விடைகள்</u>**

1. இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கமுடிவு
2. ஆப்ரிக்கா
3. சீனா
4. பிரான்சு
5. அமெரிக்கா
6. ஆஸ்திரியா
7. இத்தாலி
8. பங்குச் சந்தைகளில் கடன் முதலீடு
9. கடனுதவி
10. 1939
11. 1922
12. ஹிட்லரின் இரகசிய காவல் படை
13. எனது போராட்டம்
14. ரஷ்யா
15. ஜெர்மனி
16. ஐ.நா. தலைமையகம்
17. 1963
18. 2002
19. பாரக்பூர்
20. கான்பூர்
21. மத்திய இந்தியா
22. 1857
23. மகா சாசனம்
24. இராஜாராம் மோகன்ராய்
25. சுவாமி தயானந்த சரஸ்வதி
26. அன்னி பெசன்ட்
27. இராமலிங்க அடிகள்
28. நாட்டு பற்று மிக்க எழுத்தாளர்
29. பாலகங்காதர திலகர்
30. இந்தியாவின் பிஸ்மார்க்
31. உத்திரப் பிரதேசம்
32. லாலா லஜபத்திராய்
33. கான் அப்துல்காபர்கான
34. சுயராஜ்ய கட்சி
35. ஈ.வே. ராமசாமி
36. கேதார்நாத்
37. சதுப்பு நிலம்
38. மாளவம்
39. வடகிழக்கு இந்தியாவின் தலக் காற்று
40. மௌசின்ராம்
41. பருத்திப் பயிர்
42. ஒரு வகை நிலக்கரி
43. சுந்தரவனம்
44. பஞ்சாப்
45. உத்திரப் பிரதேசம்
46. மேற்கு வங்காளம்
47. தமிழ்நாடு
48. சோட்டா நாகபுரி மண்டலம்
49. உத்திரப் பிரதேசம்
50. மும்பை
51. சென்னை
52. டெல்லி
53. எராளமான வழிகள்
54. முறையான வான்வழி நிழற்படம்
55. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

. . . . . .

III. <u>ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறு விடை தருக</u>.

( 'அ' பிரிவிலிருந்து நான்கு, 'ஆ' பிரிவிலிருந்து ஒன்று, 'இ' பிரிவிலிருந்து நான்கு, மற்றும் 'ஈ' பிரிவிலிருந்து ஒன்று )

<u>பகுதி – அ.</u>

1. ஏகாதிபத்தியம் வரையறு.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு. பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.

2. காலனி ஆதிக்கம் என்றால் என்ன?

காலனி ஆதிக்கம் என்பது குடியேற்றங்களை அந்நிய நாட்டில் எற்படுத்தி அதன் இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஆகும்.

3. ஒப்படைப்பு முறை பற்றி சுருக்கமாக எழுதுக.

முந்தைய கால குடியேற்ற நாடுகளில் பலவும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளும் சர்வ தேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இச்சங்கம் சில கட்டுப்பாடுகளுடன் இத்தகைய நாடுகளை பராமரிக்கும்படி பல நாடுகளிடம் கேட்டுக் கொண்டது.

4. முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் யாது?

பாஸ்னிய தலைநகர் செராஜிவோ நகரில்ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர், அவரது மனைவியும் செர்பிய தீவிரவாதி இளைஞனால் கொல்லப்பட்டது காரணமாக அமைந்தது.

5. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை?

1. ஒரே தலைமை 2. சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி
3. பயங்கரவாதம் 4. பொருளாதார ஆளுமை

6. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?

1. பொது சபை 2. மன்றம் 3. செயலகம்
4. சர்வதேச நீதிமன்றம் 5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு.

7. மியூனிச் உடன்படிக்கை சிறு குறிப்பு தருக.

இங்கிலாந்து பிரதமருக்கும் ஹிட்லருக்கும் இடையே மியூனிச் என்னும் இடத்தில் நடைபெற்ற உடன்படிக்கை ஆகும். அதன்படி ஹிட்லர் சூடட்டன்லாந்தை மட்டும் ஆக்கிரமிப்புச் செய்யலாம். மற்ற இடங்களை கைப்பற்றக் கூடாது.

8. அழித்துப் பின் வாங்கும் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

1. இரண்டாம் உலகப் போரில் ரஷ்யா பின்பற்றியக் கொள்கை ஆகும்.
2. ஜெர்மனி, ரஷ்யாவைத் தாக்கிய பொழுது ஸ்டாலின், மாஸ்கோவில் உள்ள அனைத்தையும் அழித்து பின் வாங்கும் கொள்கையைப் பின்பற்றினார்.

9. அமெரிக்கா, ஜப்பான் மீது போர் தொடுக்க காரணம் யாது ?

1941 –ஆம் ஆண்டு டிசம்பர் 7– தேதி முத்து துறைமுகத்தில் உள்ள அமெரிக்க கடற்படை தளத்தை ஜப்பான் தாக்கியது. எனவே, ஜப்பான்மீது போர் தொடுத்தது.

10. ஐக்கிய நாடுகள் சபையின் சாதனைகளில் எதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

1. 1956 –ஆம் ஆண்டு எற்பட்ட சூயஸ் கால்வாய் சிக்கலை தீர்த்து வைத்தது.
2. 1963 ஆம் ஆண்டு அணு சோதனை தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

11. ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

1. உலக சுகாதார நிறுவனம் 2. பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் 3. உலக வங்கி

12. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன நாடுகள் யாவை?

1. பெல்ஜியம், 2. பிரான்சு, 3. இத்தாலி, 4. நெதர்லாந்து, 5.மேற்கு ஜெர்மனி

13. யூரோவின் முக்கியத்துவம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

1. சனவரி 1, 2002– ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணய முறை யூரோ என்றழைக்கப்படுகின்றது. 2. இதன் குறியீடு € ஆகும்.

14. விக்டோரியா மகாராணி பேரறிக்கையின் முக்கியத்துவம் யாது ?

1. இது இந்திய மக்களின் மகா சாசனமாக கருதப்படுகிறது.

2. இதன்படி இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இனி இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.

3. எனவே அவருக்குப் பதிலாக அவரது பிரதிநிதி, இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.

15. 1857 ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம் யாது ?

இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய என்பீல்டு ரக துப்பாக்கிகளில் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் பயன்படுத்தப்பட்டது, புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

16. பிரம்ம ஞான சபையின் கொள்கைகள் யாவை ?

1. மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்ப்பது.

2. பண்டைய சமயங்களைப் பற்றியும் மற்றும் தத்துவங்கள் ஆகியவற்றை கற்றல்

3. இயற்கையின் நியதிகளை அறிந்து மக்களிடையே தெய்வீக சக்திகளை வளர்ப்பது ஆகும்.

17. சில முக்கிய மிதவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக

சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஷா மேத்தா, கோபாலகிருண கோகலே, எம்.ஜி. ரானடே.

18. 1935–ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் புகுத்திய மாற்றங்கள் யாவை ?

1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகம் 2. இரட்டை ஆட்சி முறை ஒழிப்பு

3. கூட்டாட்சி அரசாங்கம் எற்படுத்தப்பட்டது. 4. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப்படல்.

19. அமைச்சரவை தூதுக்குழு – குறிப்பு தருக.

1. 1946–ல் அமைச்சரவை தூதுக்குழு இந்தியாவிற்கு வந்தது.

2. இதில் பெதிக் லாரன்ஸ், எ.வி. அலெக்சாண்டர் மற்றும் ஸ்ட்ரா போர்டு கிரிப்ஸ் ஆகியோர் உறுப்பினர் ஆவர்.

3. இக்குழு இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்படும் வரை இடைக்கால அரசை பரிந்துரைத்தது.

20. வேலூர் கலகம் குறிப்பு வரைக.

1. 1806 ஜுலை 9–ம் நாள் வேலூர் கோட்டையில் வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு ஆங்கிலேயர்களைத் தாக்கி கோட்டையைக் கைப்பற்றினார்.

2. திப்புவின் கொடி எற்றப்பட்டது. 3.அவரது இரண்டாவது மகன் பதேக் ஹதர், அரசராக அறிவிக்கப்பட்டார்.

21. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி குறிப்பு வரைக.

1. மதிய உணவு திட்டத்தினை கொண்டு வந்தார். 2. புதிய பள்ளிகளைத் திறந்தார்.

3. பல தொழிற்சாலைகளை அமைத்தார்.

22. பெரியார், வைக்கம் வீரர் என என் அழைக்கப்பட்டார்?

கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தை தளர்த்தி அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது. இதனால் வைக்கம் வீரர் என அழைக்கப்பட்டார்.

## பகுதி – ஆ

1. உலக அமைதி அவசியமானது– என் ?

உலக மக்கள் அமைதியாக வாழவும், மூன்றாம் உலக போர் வராமல் தடுக்கவும், மனித நேயம் வளரவும், வருங்காலத்தில் வளமாக வாழவும் உலக அமைதி அவசியம்.

2. இன ஒதுக்கல் கொள்கை பற்றி ஒரு குறிப்பு வரைக.

i) இன ஒதுக்கல் என்பது ஆப்ரிக்காவில் பின்பற்றப்பட்ட இனவேறுபாட்டுக் கொள்கயையாகும்.

ii) தென் ஆப்ரிக்காவில் வெள்ளையர்கள் ஆப்ரிக்க குடி மக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர்.

3. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சி .செய்வதாகும்.

4. தேர்தல் ஆணையத்தின் பணிகள் பற்றி சுருக்கமாக குறிப்புத் தருக.

1. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல். 2. வேட்பாளர்களுக்கு தேர்தல் சின்னங்களை ஒதுக்கல்
3. தேர்தல்களை நடத்துதல் 4. முடிவுகளை அறிவித்தல்.

5. இந்தியாவிலுள்ள சில சமயங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. கிறிஸ்துவ மதம். 2. இஸ்லாம் மதம் 3. புத்த மதம் 4. சமண மதம் 5. இந்து மதம்

6. கோப்ரா தோற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.

i) நுகர்வோரின் குறைகளை களைந்து, அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தோன்றியதே கோப்ரா ( நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் )

ii) இது நுகர்வோரின் மகா சாசனம் என்று அழைக்கப்படுகிறது.

7. மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியா அழைக்கப்படுவதேன் ,

i) இந்தியாவின் மக்கள் சாதி, இனம், மொழி போன்றவற்றால் பிரிக்கப்படுகின்றனர்.

ii) இப்பிரிவுகள் இந்திய மனித இனத்தைப் பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியமாகவும், ஆய்வகமாகவும் திகழ்வதால் மனித இனங்களின் அருங்காட்சியகம் என கூறுகிறார்கள்.

## பகுதி – இ

1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை ?

1. வடக்கு மலைகள், 2. வட இந்திய பெரும் சமவெளிகள் 3. தீபகற்ப பீடபூமி 4. கடற்கரை சமவெளிகள் 5. தீவுகள்

2. இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள இரண்டு முக்கிய புனித தலங்களைக் குறிப்பிடுக.

1. அமர்நாத். 2. கேதார்நாத். 3. பத்ரிநாத் 4. வைஷ்ணவி தேவி கோவில்

3. இந்தியப் பெருங் கடலில் காணப்படும் தீவுக் கூட்டங்கள் யாவை?

1. இலச்சத் தீவுகள் – அரபிக் கடல் 2. அந்தமான் நிகோபார் தீவுகள் – வங்காள விரிகுடா

4. பருவக் காற்று என்பதன் பொருள் யாது ?

1. மான்சூன் என்ற சொல் அரேபியச் சொல்லான மௌசிம் என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் பருவ காலம் என்பதாகும்.

2. கோடை காலத்திற்கும், குளிர் காலத்திற்கும் இடையே தங்களது திசைகளை முழுவதும் மாற்றிக் கொண்டு வீசும் காற்றுகளுக்கு பருவக் காற்று என்று பெயர்.

5. மிக அதிக மழை பெறும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. கிழக்கு இமய மலையின் தெற்கு சரிவு 2. மத்திய கங்கைச் சமவெளி.

3. மேற்கு மலைத் தொடர் 4. மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிஸா

6. பருவக் காற்று வெடிப்பு என்பதன் பொருள் யாது ?

1. தென்மேற்கு பருவக் காற்று, கேரளாவின் தென் பகுதியை அடையும் போது பலத்த இடி மின்னலுடன் கூடிய மழையை அளிப்பதன் மூலம் தென்மேற்கு பருவக் காற்று காலம் ஆரம்பிப்பதை காட்டுகின்றது.

2. இதனை பருவ மழை வெடிப்பு என்பர்.

7. இயற்கை வளம் என்றால் என்ன?

i) அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து பொருட்களையும் இயற்கை வளங்கள் என்கிறோம். ii) எ.கா. நிலம், நீர், காற்று மற்றும் பல.

8. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள் யாவை?

1. ஆந்திரப் பிரதேசம், 2. ஜார்கண்ட் 3. பீகார் 4. ராஜஸ்தான்.

9. வேளாண் தொழிலை நிர்ணயிகக்கும் காரணிகள் யாவை ?

1. நிலத் தோற்றம் 2. கால நிலை 3. மண்வகை 4. நீர்

10. பருத்தி விளையுமிடங்களைக் கூறுக.

1. குஜராத், 2. மகாராஷ்டிரம் 3. ஆந்திரப் பிரதேசம் 4. கர்நாடகா 5. தமிழ்நாடு

11. தோட்டப் பயிர்கள் யாவை ?

1. தேயிலை, 2. காப்பி, 3. இரப்பர்

12.உற்பத்தி என்றால் என்ன ?

கச்சாப் பொருட்களை இயந்திரங்கள் மூலமாக நுகரும் பொருட்களாக மாற்றுவதே உற்பத்தி எனப்படும்.

13. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?

1. மூலப் பொருட்கள் 2. எரி சக்தி 3. போக்குவரத்து 4. மனித சக்தி

5. நீர்வளம் 6. சந்தை – அரசாங்க கொள்கைகள்

14. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் யாவை ?

1. பருத்தி ஆலைகள் 2. சணல் ஆலைகள் 3. சர்க்கரை ஆலைகள்

15. நீர் மாசடைதல் என்றால் என்ன ?

நீர் மாசடைதல் என்பது நல்ல நீரில் வேதியியல், இயற்பியல், உயிரியல் மாற்றம் எற்படுவது ஆகும்.

16. உயிரினப் பன்மை என்றால் என்ன ?

உயிரினப் பன்மை என்பது ஒரு குறிப்பிட்ட சுற்றுச் சூழலில் வாழும் பல்வேறு உயிரினங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் தன்மையைக் குறிப்பதாகும்.

17. மின்னியல் கழிவு என்றால் என்ன ?

தொலைக்காட்சி பெட்டிகள், கைபேசி, கணினி, குளிர் சாதனப் பெட்டி, அச்சு இயந்திரம் ஆகியவற்றின் கழிவுகள் மின்னியல் கழிவுகள் ஆகும்.

18. வணிகம் என்றால் என்ன ? வணிகத்தின் வகைகள் யாவை

i. சேவைகளை வாங்கும், விற்கும் அல்லது பண்ட மாற்றம் செய்யும் செயல்முறை வணிகம் ஆகும்.

ii. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

19. தகவல் போக்குவரத்து வலையமைப்பின் நன்மைகள் யாவை ?

i) தகவல் தொடர்பின் திறனை மேம்படுத்துதல் ii) மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

20. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன ?

புவியின் எந்த ஒரு பொருளையும் நேரடியாக தொடர்பு கொள்ளாமல் புவியின் விவரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வு ஆகும்.

21. புவி தகவல் தொகுதியின் இரண்டு பயன்களைக் குறிப்பிடுக.

i . சுரங்கங்கள் தோண்டவும் ii. கனிம வளங்களைக் கண்டறியவும் புவித் தகவல் தொகுதிகள் பயன்படுகிறது.

## பகுதி – ஈ

1. நாட்டு வருமானம் வரையறு.

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஒராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

2. தலா வருமானம் என்றால் என்ன ?

நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் ஆகும்.

3. தலையிடாக் கொள்கை – சிறு குறிப்பு வரைக.

தலையிடாக் கொள்கை என்பது அரசு பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.

4. பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூன்று நோக்கங்களை எழுதுக.

1. வறுமையை ஒழித்தல். 2. வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல் 3. சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல்.

5. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?

பொதுத் துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதை கலப் பொருளாதாரம் எனப்படும்.

6. தாராள மயமாதல் என்றால் என்ன ?

தாராள மயமாதல் என்பது தனியார் துறை தொழில் நிறுவனங்களுக்கான விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெறுவதாகும்.

7. தனியார் மயமாதல் என்றால் என்ன ?

பொதுத் துறை நிறுவனங்களை தனியார் உடமையாக்குவதே தனியார் மயமாதலாகும்.

8. உலக மயமாதல் என்றால் என்ன ?

ஒரு நாட்டின் அங்காடிகளை பன்னாட்டு அங்காடிகளுடன் தொடர்புபடுத்துவதே உலகமயமாதல் ஆகும்.

**IV. கீழ்கண்ட தலைப்புகளில் இரண்டினை தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. ஏகாதிபத்தியம் உருவாகுவதற்கு காரணங்கள்

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நாகரிகமானதாக கருதப்பட்டது எது ?

ஏகாதிபத்தியம்

ஆ) வெள்ளையர்களின் சுமை என ஐரோப்பியர்களால் கருதப்பட்டது யாது ?

ஆப்ரிக்க, ஆசிய மக்களுக்கு நாகரீகம் கற்றுத் தருவது

இ) ஐரோப்பிய நாடுகள், குடியேற்ற நாடுகளை எற்படுத்த முனைந்தது என் ?

நாடுகளிடையே எற்பட்ட ஆதிக்கப் போட்டி

ஈ) ஏகாதிபத்திய கொள்கையை ஊக்குவித்தது யாது ?

ஆப்ரிக்க, ஆசிய கண்டங்களை அடையக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வழித் தடங்கள்

2. பாக்சர் புரட்சி:

அ) சீன – ஜப்பானியப் போரின் விளைவு யாது?

சீனா, ஜப்பானால் தோற்கடிக்கப்பட்டது.

ஆ) சீனா, ஜப்பானுக்கு அளித்த தீவு எது ? ஃபார்மோசா

இ) பாக்சர் கலகத்திற்கான காரணம் யாது? சீன மக்களின் கோபம்

ஈ) பாக்சர்கள் என்ன செய்தனர்? குடியேற்ற நாடுகளைத் தாக்கினர்.

3. பால்கன் பிரச்சனை

அ) பால்கன் நாடுகளைக் குறிப்பிடுக.

செர்பியா, பல்கேரியா, அல்பேனியா, கீரிஸ் மற்றும் மாண்டி நீக்ரோ

ஆ) முதல் பால்கன் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது ?

லண்டன் உடன்படிக்கையின் மூலம் முடிவிற்கு வந்தது.

இ) ஏனைய நாடுகள் பல்கேரியாமீது ஏன் போர் தொடுத்தன ?

போர் முடிவில் கிடைத்த பகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் செர்பியாவுக்கும், பல்கேரியாவிற்கும் எற்பட்ட பிரச்சனையினால்.

ஈ) இரண்டாம் பால்கன் போரின் முடிவு என்ன?

போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டு, சொபியா பெரும் பகுதிகளைத் தன்னோடு சேர்த்துக் கொண்டது.

4. சர்வதேச சங்கம்

அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக.

சர்வதேச சமுதாயம், உலக அமைதி கூட்டமைப்பு,

ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது? ஜெனிவா

இ) உறுப்பு நாடுகள், தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும்?

சர்வதேச சங்கத்தினை அணுகி சுமூகமான முறையில் தீர்வு காண வேண்டும்.

ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது ? 1931

5. F.T. ரூஸ்வெல்ட்

அ) ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது ? 1932

ஆ) பிராங்களின் டி – ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கப்பட்டார் ? F.D.R.

இ) அவரது தேர்தல் அறிக்கை யாது?

அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக் கொள்கையை அர்பணிக்க நான் உறுதியளிக்கிறேன்.

ஈ) அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன ? புதிய பயனுரிமைக் கொள்கை

6. பாசிசக் கட்சி

அ. பாசிசக் கட்சியை தோற்றுவித்தவர் யார்? முசோலினி

ஆ. முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக ? அதிகப் படை, அதிக மதிப்பு

இ. பாசிசத்தின் நோக்கங்கள் என்ன ?

1. நாட்டை உயர்நிலைக்குக் கொணர்தல் 2.ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை

ஈ. பாசிசத்தின் குறிக்கோள்கள் என்ன? எல்லாம் நாட்டிற்காகவே, நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை.

7. அடால்ஃப் ஹிட்லர்

அ) அடால்ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார்? ஆஸ்திரியா

ஆ) அவர் தந்தையின் தொழில் என்ன ? சுங்க அதிகாரி

இ) ஹிட்லர் எதை தோற்றுவித்தார் ? நாசிசக் கட்சி

ஈ) ஹிட்லர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன ? எனது போராட்டம்.

8.இரண்டாம் உலகப் போர் காரணங்கள்

அ) ஜப்பான் – இத்தாலி ஜெர்மனி செய்து கொண்ட உடன்படிக்கை யாது ?

ரோம் – பெர்லின் டோக்கியா அச்சு உடன்படிக்கை.

ஆ) முதல் உலகப் போருக்கு பின் எற்பட்ட சில அரசியல் கொள்கைகளைக் குறிப்பிடுக.

ஜனநாயகம், பொதுவுடமைக் கொள்கை, பாசிசம், நாசிசம்.

இ) வல்லரசு நாடுகளின் தலைவர்கள் பின்பற்றிய கொள்கை பற்றி எழுதுக. போலியான அமைதிக் கொள்கை.

ஈ) ஹிட்லர் எதனை மீறினார் ? மியூனிச் உடன்படிக்கையை மீறினார்.

9. பார்பேரிய கடல் போர் நடவடிக்கைகள்

அ) பார்பேரிய கடல் போர் எந்த ஆண்டு தொடங்கியது . 1941

ஆ) ஹிட்லர் விரும்பியது யாது ? கம்யூனிசத்தை அழிக்க விரும்பினார்.

இ) ஹிட்லரின் உத்தரவு என்ன? முசோலினியின இத்தாலிய படைகளுக்கு உதவுமாறு உத்தரவிட்டார்.

ஈ) அச்சு நாடுகள், பால்கன் நாடுகளை எப்போது தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

1941 எப்ரல் மாத இறுதிக்குள்.

10. ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்

அ) ஐ.நா. செய்து கொண்ட முக்கிய உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக.

1. 1963–ம் ஆண்டு அனு சோதனைச் சட்டம் 2. 1996–ம் ஆண்டு தொடர் அனு சோதனை தடைச் சட்டம்

ஆ) சுற்றுச் சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு எங்கு நடத்தப்பட்டது? ரியோ–டி–ஜெனிராவில்

இ) அனைத்து நாடுகளும் எதனை எற்றுக கொண்டன? அறிக்கை 21–ஐ எற்றுக் கொண்டன.

ஈ) சூயஸ் கால்வாய் பிரச்சனையை ஐ.நா. எவ்வாறு முடிவுக்கு கொண்டு வந்தது.

ஐ.நா. தனது அமைதிப் படையை எகிப்துக்கு அனுப்பி பிரச்சனைக்கு தீர்வு கண்டது.

12. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான அரசியல் காரணங்கள்

அ) துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்? வெல்லெஸ்லி பிரபு

ஆ) டல்கௌசி பிரபு அறிமுகப்படுத்திய கொள்கை யாது? நாடு இழப்புக் கொள்கை

இ) இரண்டாம் பகதுர்ஷா மீது ஆங்கிலேயர் மேற்கொண்ட நடவடிக்கை யாது?

பகதுர்ஷா சிறை பிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஈ) நானா சாகிப் தனது வெறுப்பை ஆங்கிலேயர் மீது அதிகப்படுத்தியது என்?

நானா சாகிப்பிற்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதால்.

12.மத்திய இந்தியாவில் புரட்சி

அ) மத்திய இந்தியாவில் புரட்சியை வழி நடத்திச் சென்றவர் யார்? ஜான்சி இராணி இலட்சுமிபாய்

ஆ) இராணி இலட்சுமிபாய் கைபற்றிய நகரம் யாது ? குவாலியர்

இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன? போரில் கொல்லப்பட்டார்.

ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன? கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டார்.

13. பிரம்ம சமாஜம்

அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார்? இராஜாராம் மோகன்ராய்

ஆ) இராஜாராம் மோகன்ராய் பயின்ற மொழிகள் யாவை?

சமஸ்கிருதம், அரபிக், ஆங்கிலம், லத்தீன்

இ) இராஜாராம் மோகன்ராய் எழுதிய புத்தகங்கள் யாவை?

1. இயேசு கிறிஸ்துவின் கட்டளைகள் 2. அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி

ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது ? ஒரே கடவுள் என்ற நம்பிக்கை.

14. ஆரிய சமாஜம்

அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற் பெயர் என்ன? மூல்சங்கர்

ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் குரு யார்? சுவாமி வராஜ்னந்தர்

இ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கை என்ன? வேதங்களை நோக்கிச் செல்.

ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது?

பெண் கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு, பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்.

15. அலிகார் இயக்கம்:

அ) முஸ்லீம்களின் முதல் சமய இயக்கத்தின் பெயர் என்ன? அலிகார் இயக்கம்.

ஆ) சர் சையது அகமதுகான் உறுதியாக நம்பியது என்ன ?

தன்னுடைய எழுத்தாற்றலால் முஸ்லீம் சமுதாயத்தில் சீர்திருத்தத்தை கொண்டு வருவதை நம்பினார்.

இ) சர் சையது அகமது கானின் சாதனை யாது?

அலிகாரில் தோற்றுவிக்கப்பட்ட முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி இவரது சாதனையாகும்.

ஈ) சர் சையது அகமது கான் வெளியிட்ட செய்தித் தாளின் பெயர் என்ன?

தாசில் – உத்– அஃலக்

16. இந்திய தேசீய காங்கிரஸ்

அ) இந்திய தேசிய காங்கிரஸ் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ? 1885

ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் யாருடைய ஆலோசனையில் தோற்றுவிக்கப்பட்டது ? A.O. ஹியூம்

இ) காங்கிரஸ் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது ? இதற்கு தலைமை தாங்கியவர் யார்?

மும்பை, W.C. பானர்ஜி

ஈ) காங்கிரஜின் முதல் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் சிலரைக் குறிப்பிடுக.

தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, ராணடே

17. ஜாலியன் வாலாபாக் படுகொலை

அ) கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார் ? சத்யபால் மற்றும் சாய்புதீன் கிச்லு

ஆ) மக்கள் எங்கு கூடினர். அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்.

இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார்? ஜெனரல் டயர்

ஈ) இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன ? தனது நைட்வுட் பட்டத்தை துறந்தார்.

18. சைமன் குழு

அ) சைமன் குழு என் நியமிக்கப்பட்டது ?

1919 ஆம் ஆண்டு சட்டத்தின் பயன்பாடு குறித்து ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்த ஆலோசனை கூறவும் நியமிக்கப்பட்டது.

ஆ) இந்தியர்கள் இக்குழுவினை என் நிராகரித்தனர்?

இக்குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள், அனைவரும் ஆங்கிலேயர் – ஒரு இந்தியர் கூட இடம் பெறாததால்.

இ) சைமன் குழு எப்படி வரவேற்கப்பட்டது? கருப்புக் கொடி போராட்டத்துடன்.

ஈ) சைமன் குழு எதிர்ப்பு போராட்டத்தின் போது இறந்த இந்திய தலைவரின் பெயரைக் குறிப்பிடுக.

லாலா லஜபதிராய்

19. மவுண்ட் பேட்டன் திட்டம்

அ) 1947 ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றவர் யார்? மவுண்ட் பேட்டன் பிரபு

ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார்? மவுண்ட் பேட்டன் பிரபு

இ) மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?

இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இரு நாடுகளாகப் பிரிக்கப்படும்.

ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன ?

எற்றுக் கொண்டன.

## V. **எதேனும் நான்கினை வேறுபடுத்திக் காட்டு**

1. மேற்கு தொடர்ச்சி மலைகள் – கிழக்கு தொடர்ச்சி மலைகள்

| 1. மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| 1. மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கின்றன. | பெரும்பாலும் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கின்றன. |
| 2. தொடர்ச்சியானது. | தொடர்ச்சியற்றது. |

2. கிழக்கு கடற்கரை சமவெளி – மேற்கு கடற்கரை சமவெளி

| மேற்கு கடற்கரை சமவெளி | கிழக்கு கடற்கரை சமவெளி |
|---|---|
| 1. இவை குஜராத் முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. | இவை மேற்கு வங்கம் முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. |
| 2. குறுகலானது. | அகலமானது. |

3. தென்மேற்கு பருவக் காற்று – வடகிழக்கு பருவக் காற்று

| தென்மேற்கு பருவக் காற்று | வடகிழக்கு பருவக் காற்று |
|---|---|
| 1. இவை ஜுன் முதல் செப்டம்பர் வரை வரை வீசுகிறது. | இவை செப்டம்பர் முதல் நவம்பர் வரை வீசுகிறது. |
| 2. மேற்கு கடற்கரை அதிக மழையைப் பெறுகிறது. | கிழக்கு கடற்கரை அதிக மழையைப் பெறுகிறது. |

4. வானிலை – காலநிலை

| வானிலை | காலநிலை |
|---|---|
| ஓரிடத்தில் ஒரு நாளில் நிலவும் தட்ப வெப்ப நிலையே, வானிலை எனப்படும். | நீண்ட கால சராசரி வானிலையே கால நிலை எனப்படும். |

5. புதுப்பிக்க கூடிய வளம் – புதுப்பிக்க முடியாத வளம்

| புதுப்பிக்க கூடிய வளம் | புதுப்பிக்க முடியாத வளம் |
|---|---|
| 1. இவை எளிதாக உற்பத்தி செய்யக்கூடிய வளங்கள் . | இவை எளிதாக உற்பத்தி செய்ய முடியாத வளங்கள் |
| எ.கா. சூரிய ஒளி, காற்று | எ.கா. – பெட்ரோலியம், நிலக்கரி |

6. காற்று மின் சக்தி – அனல் மின் சக்தி

| காற்று மின் சக்தி | அனல் மின் சக்தி |
|---|---|
| 1. காற்று மூலம் மின்சாரம் தயாரிக்கப்–படுகிறது. . | நிலக்கரி மூலம் மின்சாரம் தயாரிக்கப் படுகிறது. . |
| குஜராத் மற்றும் தமிழ்நாட்டில் அதிக அளவில் காற்றாலைகள் உள்ளன. | ஒரிஸா, மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் அதிக அளவில் அனல் மின் நிலையங்கள் உள்ளன. |

7. தன்னிறைவு வேளாண்மை – வணிக வேளாண்மை

| தன்னிறைவு வேளாண்மை | வணிக வேளாண்மை |
|---|---|
| 1. சுய தேவையை நிறைவு செய்யும் பொருட்டு உற்பத்தி செய்தல் . | வணிக நோக்கில் உற்பத்தி செய்தல் |
| 2. நவீன தொழில் நுட்ப முறை பயன்படுத்தப் படுவதில்லை. | நவீன தொழில் நுட்ப முறை பயன்படுத்தப்படுகின்றது. |

8. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் – கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள் –

| வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள |
|---|---|
| 1. வேளாண் பொருட்களை மூலப் பொருட்களாக கொண்டு உற்பத்தி செய்யப்–படுகிறது. | கனிம பொருட்களை மூலப் பொருட்களாக கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. |
| எ.கா. சர்க்கரை ஆலை | எ.கா. – இரும்பு எஃகு ஆலை |

9. நீர் மாசடைதல் – நிலம் மாசடைதல்

| நீர் மாசடைதல் | நிலம் மாசடைதல் |
|---|---|
| 1. நன்னீர் தரத்தில் எற்படும் வேதியியல் மாற்றம் நீர் மாசடைதல் என்று பெயர். | தொழிலக கழிவுகள் மண்ணில் கலப்பதால் எற்படும் மாற்றம் நிலம் மாசடைதல் என்று பெயர். |
| 2. நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றது. | 2. விவசாயம் பாதிக்கப்படுகின்றது. |

10. எற்றுமதி – இறக்குமதி

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| 1. ஏற்றுமதி என்பது நாட்டின் உபரி பொருட்களை விற்பது ஆகும்.. | இவை எளிதாக உற்பத்தி செய்ய முடியாத வளங்கள் |
| எ.கா. கோதுமை, சர்க்கரை | எ.கா. – பெட்ரோலியம், உரங்கள் |

11. உள்நாட்டு வணிகம் – பன்னாட்டு வணிகம்

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| 1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுகிறது. | இரண்டு(அல்லது) அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையில் நடைபெறுகிறது. |
| இம்முறையில் காகிதப் பணம் பயன்படுத்தப்படுகிறது. | இம்முறையில் அந்நிய செலாவணி பயன்படுத்தப்படுகிறது. |

12. வான்வெளிப் படங்கள் – செயற்கை கோள் படங்கள்

| | |
|---|---|
| 1. விமானங்கள் உதவியால் எடுக்கப்படும் புகைப்படங்கள் | செயற்கைக் கோள் உதவியால் எடுக்கப்படும் பிம்பங்கள் |
| இவை இரு பரிமாணப் படங்கள் | இவை முப்பரிமானப் படங்கள் |

VI**. பிரிவு அ, ஆ, இ, மற்றும் ஈ ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு வினா விடை அளிக்கவும். ( விடை ஒரு பத்தியில் அமைதல் வேண்டும் ).**

**பகுதி – அ**

1. ஏகாதிபத்தியம் எற்படக் காரணங்கள் யாவை?

1. தொழிற்புரட்சியின் காரணமாக பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. பொருட்களை விற்க சந்தை தேவைப்பட்டதால் ஆப்ரிக்க ஆகிய நாடுகளில் குடியேற்றத்தினை ஏற்படுத்தின.
2. தேசிய மயமாக்கப்பட்ட நாடுகள், தங்கள் பெருமையை நிலைநாட்ட வளர்ச்சி குன்றிய நாடுகளின்மீது ஆதிக்கம் செய்ய விரும்பின.
3. சமநிலை ஆதிக்கத்தை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை எற்படுத்தின.
4. புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு எகாதிபத்திய கொள்கையை ஊக்குவித்தன.

5. மக்கள் தொகை பெருக்கம் மற்றும் வேலையின்மை ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகளைத் தேடிச் செல்லத் தூண்டியது.

2. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை?

1. வலிமை மிக்க நாடுகள் குடியேற்ற நாடுகளில் போக்குவரத்து, தொலை தொடர்புகளை எற்படுத்தின.
2. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தன.
3. குடியேற்ற நாட்டு மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
4. குடியேற்ற நாடுகள் பொருட்களை விற்கும் சந்தையாக மாற்றப்பட்டன.
5. குடியேற்ற நாடுகளில் இனவேறுபாட்டு கொள்கை பின்பற்றப்பட்டன.

3. சர்வதேச சங்கத்தின் சாதனைகளை விளக்குக.

1. பின்லாந்து–ஸ்வீடன் இடையே ஆலந்து தீவு உரிமைப் பிரச்சனையை தீர்த்து வைத்தது.
2. கிரீஸ், பல்கேரியா இடையே எற்பட்ட எல்லை பிரச்சனையை தீர்த்து வைத்தது.
3. உலக நாடுகளில் பரவிய பல்வேறு நோய்களை தீர்க்கப் பாடுபட்டது.
4. அகதிகள் மற்றும் தொழு நோயாளிகள் மறுவாழ்விற்காக பேருதவி புரிந்தது.
5. உலக நாடுகளின் கல்வித் தரத்தை உயர்த்தியது.

4. ஹிட்லரின் தீவிர ஆக்கிரமிப்புக் கொள்கை பற்றி விளக்குக.

1 ஹிட்லர் கட்டாய இராணுவச் சேவையை அறிமுகப்படுத்தினார்.
2. ஆயுதங்களை பெருமளவில் உற்பத்தி செய்து குவித்தார்.
3. மக்கள் தொகை குடியேற்றத்திற்காக பிற நாடுகளைக் கைபற்ற முனைந்தார்.
4. ரைன்லாந்தைக் கைப்பற்றி லொகர்னோ ஒப்பந்தத்தை மீறினார்.
5. 1938 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்தார்.

5. இரண்டாம் உலகப் போர் எற்படக் காரணங்கள் எதெனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

1. வெர்செயில்ஸ் உடன்படிக்கை பழி வாங்கும் நோக்கத்தில் எற்படுத்தப்பட்டது.
2. ஜெர்மனி,ஜெர்மனியார்களுக்கும்,இத்தாலி இத்தாலியர்களுக்கும் என்ற கொள்கை தேசிய எழுச்சியை எற்படுத்தின.
3. சர்வ தேச சங்கத்தின் தோல்வி, இரண்டாம் உலகப் போருக்கு காரணமானது.
4. ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கொள்கை இரண்டாம் உலகப் போருக்கு காரணமாயிற்று.
5. 1939–ஆம் ஆண்டு செப்டம்பர் 1–ம் தேதி ஹிட்லர் போலந்து மீது மின்னல் வேக தாக்குதல் நடத்தினார்.

6. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை?

1. ஏராளமான உயிரிழப்பையும், பொருளாதார அழிவையும் ஏற்படுத்தின.
2. சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.
3. பிரிட்டனும், பிரான்சும் வலுவிழந்தது.
4. அமெரிக்காவும், ரஷ்யாவும் வல்லரசாக மாறியன.
5. ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே பனிப் போர் தொடங்கியது.

7. 1857–ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கான நிர்வாக மற்றும் இராணுவக் காரணங்களை விவரி

<u>நிர்வாக காரணங்கள்</u>

i. பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழியை புகுத்தியது.

ii. அதிகமான நில வரி வசூலிக்கப்பட்டது. iii. இந்தியர்களுக்கு உயர் பதவி மறுக்கப்பட்டது.

<u>இராணுவக் காரணங்கள் :</u>

1. இந்திய சிப்பாய்களுக்கு குறைந்த ஊதியம் கொடுக்கப்பட்டது.
2. இந்திய சிப்பாய்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை.
3. இந்திய சிப்பாய்கள் கடல் கடந்து பணி புரிய வேண்டி இருந்தது.

8. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான ஐந்து காரணங்களைக் கூறுக.

1. ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் தேசியத்தையும், மற்றும் ஒற்றுமையையும் நிலைநாட்டியது.
2. ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு எற்பட்டதால் அந்த நாடுகளைப் போல தாங்கள் விடுதலை பெற வேண்டும் எனக் கருதி போராட எண்ணினர்.
3. நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து மக்களின் கருத்துக்களை மூலை முடுக்குகளுக்கு எடுத்துச் சென்றது.
4. இந்தியத்தலைவர்கள் இந்தியாவின் பெருமைகளை மக்களிடையே எடுத்துரைத்து நாட்டுப் பற்றை தூண்டினர்.
5. அச்சகமும், செய்தித்தாள்களும் மக்களிடையே விழிப்புணர்வை எற்படுத்தின.

9. 1857–ஆம் ஆண்டு புரட்சிக்கான விளைவுகள் யாவை ?

1. இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பினை இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொண்டார்.
2. அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.
3. இந்தியாவின் பழமையான பண்பாடு, பழக்க வழக்கங்கள் மதிக்கப்பட்டன.
4. தேசப் பற்றை விழித்தெழச் செய்தது. 5. கானிங் பிரபு முதல் அரசப் பிரதிநிதியானார்.

10. 1920–22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக? ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது. என் ?

1. முதற்கட்டமாக ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும், பட்டங்களையும் விருதுகளையும் துறந்தனர்.
2. இரண்டாவது கட்டமாக வேலை நிறுத்தம் உட்பட பெரும் போராட்டங்களை நடத்தினர்.
3. மூன்றாவது கட்டமாக வரி கொடா இயக்கம் தொடங்கப்பட்டது.
4. சௌரி சௌரா என்னுமிடத்தில் நடந்த போராட்டம், விவசாயிகள்மீது நடந்த துப்பாக்கி சூடு, விவசாயிகள் காவல் நிலையத்திற்கு தீயிட்டு 22 காவலர் உயிர் இழந்தனர். இதனால் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டார்.

11. மூன்று வட்ட மேஜை மாநாடுகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

1. முதல் வட்ட மேஜை மாநாடு, இந்திய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு லண்டனில் கூடியது.
2. காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை.
3. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் காந்தி இர்வின் ஒப்பந்தத்தின்படி காந்தியடிகள் கலந்து கொண்டார். இதனால் உப்புச் சட்டங்களை திரும்ப பெறுவது, கைது செய்த இந்தியர்களை விடுதலை செய்வது என அரசு ஒப்புக் கொண்டது.
4. மூன்றாவது வட்ட மேஜை மாநாட்டில் காந்திஜி கலந்து கொள்ளவில்லை. எனவே தோல்வியில் முடிந்தது.

12. வெள்ளையனே வெளியேறு இயக்கம்.

1. கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வி அடைந்தது.
2. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் பல வெற்றிகளைப் பெற்று இந்தியாவை தாக்க ஆரம்பித்தது.
3. காந்தி ஆங்கிலேயரே இதற்கு காரணம் என எண்ணினார்.
4. எனவே நாட்டை விட்டு ஆங்கிலேயரை விரட்ட வேண்டும் என எண்ணினார்.
5. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கி, செய் அல்லது செத்து மடி என முழங்கினார்.

## <u>பகுதி – ஆ</u>

1. பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை பற்றி எழுதுக.

<u>பஞ்சசீலம் :</u>

பிரதமர் ஜவகர்லால் நேரு அமைதிக்காக பின்பற்றிய ஐந்து அம்ச கொள்கையையே பஞ்சசீலம் என அழைக்கப்படுகிறது.

1. ஒவ்வொரு நாடும். பிற நாடுகளின் இயையாண்மையை மதித்தல்.
2. எந்த ஒரு நாடும் பிற நாட்டைத் தாக்கக் கூடாது.
3. எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

<u>அணிசேராக் கொள்கை :</u>

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாக பிரிந்தன.
அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும் ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின.
இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக விளங்கியது.

2. சார்க் அமைப்பு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோன்றியது.
2. இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
3. இதன் முதல் பொதுச் செயலாளர் ஆசான் ஆவார்.
4. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூடான், பங்களாதேஷ், இலங்கை, மாலத் தீவுகள், ஆப்கானிஸ்தான், ஆகியவை உறுப்பு நாடுகள்.
5. போக்குவரத்து, சுற்றுல்லா, சுகாதாரம், வேளாண்மை, தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்படுகின்றன.

3. தேர்தல் முறையை குறிப்பிட்டு அவற்றைப் பற்றி விளக்கம் தருக.

<u>தேர்தல் முறை</u> : இரண்டு வகைப்படும். 1. நேரடித் தேர்தல் முறை 2. மறைமுகத் தேர்தல் முறை

<u>நேரடித் தேர்தல் முறை</u> :– மக்கள், தங்கள் பிரதிநிதிகளை தாங்களே நேரடியாக வாக்களித்து தேர்வு செய்வது.

எ.கா. சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கு நடத்தப்படும் தேர்தல்.

<u>மறைமுகத் தேர்தல்</u>

1. மக்கள் தங்கள் பிரதிநிதிகளை உறுப்பினர்கள் மூலமாக தேர்ந்து எடுப்பது மறைமுகத் தேர்தல்
2. எ.கா. குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கும் முறை.

4. தேசிய  ஒருமைப்பாடு பற்றி எழுதுக.

1. இந்தியாவின் புவியியல் அமைப்பு,  வாழ்க்கை முறை மொழி, உணவு, உடை போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர்.

2. இந்தியப் பாரம்பரியத்தில் அவர்கள் ஒன்றுபடுகின்றனர்.

3. மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, சகிப்புத் தன்மை போன்றவை ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ வழி செய்கின்றன.

4. இந்தியர் என்ற எண்ணம், அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.

5. தேசியக் கொடி, தேசியப் பாடல், தேசிய சின்னங்கள் போன்றவையும் ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.

5. நுகர்வோரைப் பாதுகாக்கத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்:

1. கல்வி நிலையங்களில் நுகர்வோர் கழகங்கள் அமைத்தல்.

2. நகரங்களில் குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குதல்.

3. கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு எற்படுத்துதல்.

4. நுகர்வோர் கவசம் இதழின் மூலம் விழிப்புணர்வு எற்படுத்துதல்.

5. வானொலி, தொலைக்காட்சி மூலம் பொது மக்களிடம் பிரச்சாரம் செய்தல் முதலியனவாகும்.

<u>பகுதி – இ</u>

1.இந்தியா ஓர்  துணைக் கண்டம் – நியாயப்படுத்துக. (அ) காரணம் கூறுக.

ஒரு கண்டத்திற்குரிய பண்புகளான  1. இயற்கை அமைப்பு பிரிவுகளையும்  2. காலநிலையையும்
3. இயற்கைத் தாவரங்களையும்  4. கனிம வளங்களையும்.
5. கலாச்சார கூறுகளையும் பெற்றுள்ளதால் இந்தியாவை ஒரு துணைக் கண்டம் என்கிறோம்.

2. வேற்றுமையில் ஒற்றுமை பற்றி விவரி.

1. இந்தியாவின் மிக உயரமான சிகரம் K2 –வும், மிகத் தாழ்ந்த கடற்கரை சமவெளியும் உள்ளது.

2. மிக அதிக மழை பெறும் பகுதியான மௌசின்ராமும், குறைந்த மழை பெறும் தார் பாலைவனமும் இங்குள்ளது.

3. அடர்ந்த காடுகள், மேற்கு தொடர்ச்சி மலையிலும் வறண்ட முட்புதர் காடுகள் தார் பாலைவனத்திலும் உள்ளது.

4. பல்வேறு கலாச்சாரங்கள், மொழி, சமயங்கள் போன்றவை இந்தியாவில் உள்ளன.

5. இவ்வாறு வேறுபட்டாலும் நாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வில் ஒன்றுபட்டு நிற்பதால் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை உள்ள நாடாக உள்ளது.

3. தென்மேற்கு பருவக் காற்றின் எதேனும் ஒரு கிளையினை விவரி.

தென்மேற்கு பருவக் காற்றின் இரு கிளைகள்  1. அரபிக் கடல் கிளை  2. வங்காள விரிகுடா கிளை

<u>அரபிக் கடல் கிளை:</u>  1. இக்காற்று ஈரப்பதம் மிக்க காற்று

2. மேற்கு தொடர்ச்சி மலைகளால் தடுக்கப்பட்டு மேற்கு கடற்கரை அதிக  மழைப் பொழிவைத் தருகிறது.

3. இரண்டாவது பகுதி விந்திய சாத்பூரா மலைகளைளக் கடந்து சோட்டா நாகபுரி பகுதிக்கு மழையைத் தருகிறது.

4. மூன்றாவது பகுதி காற்றுக்கு இணையாக அமைந்துள்ள  ஆரவல்லி மலையைக் கடந்து மழையைத் தருவதில்லை.

5. பின்பு வங்காள விரிகுடா கிளையில் இணைகின்றது.

4. மழை நீர் சேகரிப்பினை விளக்குக.

1. இந்தியா, வெப்ப மண்டல பருவக் காற்று காலநிலை பகுதியில் காணப்படுகின்றது.

2. பருவக் காற்றில் மழை சீற்றுக் காணப்படுகின்றது.

3. எனவே மழை நீரை சேகரிப்பது அவசியமாகும். 4. இம்மழை நீரை நிலத்தின் அடியில் சேகரிக்கலாம்.

5. மழை நீரை சேகரித்து தேவைப்படும் நேரங்களில் பயன்படுத்துவது மழை நீர் அறுவடையாகும்.

5. காடுகளின் முக்கியத்துவத்தினை விவரி.

1. காடுகள் வீட்டிற்கும், தொழிற்சாலைகளுக்கும் தேவையான மூலப் பொருட்களைத் தருகிறது.

2. காடுகளின் மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. 3. சுற்றுலா மையங்களாக உள்ளன.

4. மண்ணரிப்பைத் தடுக்கிறது. 5. நாட்டின் எரி சக்தி தேவையை 40 % பூர்த்தி செய்கிறது.

6.இந்தியச் சாலைகளின் வகைகளை விவரி:

1. கிராமச் சாலைகள் – கிராம பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

2. மாவட்டச் சாலைகள் – நகராட்சி (அ) மாநகராட்சி நிர்வகிக்கின்றது

3. மாநிலச் சாலைகள் – மாநில அரசு நிர்வகிக்கி ன்றது

4. தேசிய நெடுஞ்சாலைகள் – மத்திய அரசு நிர்வகிக்கின்றது

5. தங்க நாற்கர சாலை – மாபெரும் சாலை வளர்ச்சித் திட்டம் 6. விரைவு நெடுஞ்சாலைகள்,

7.எல்லையோர சாலைகள் மற்றும் பன்னாட்டு சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

7.தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை விவரி.

.1 புவியின் விவரங்களை தொலைவில் இருந்து சேகரிப்பது ஆகும். (நேரடியாக தொடர்பு கொள்ளாமல்)

2. இவற்றின் மூலம் பாறைக் கோளம், நீர் கோளம், வளிக்கோளம் போன்றவை அளவிடப்படுகின்றது.

3. இதில் உணர்விகள் என்ற கருவி பயன்படுகின்றது.

4. இக்கருவிகள் ஹெலிகாப்டர், விமானங்கள், செயற்கை கோளில் பொருத்தப்பட்டு தகவல் சேகரிக்கப்படுகின்றது.

5. சூரிய ஒளியின் மின்காந்த அலைகளை பதிவு செய்வதன் மூலம் பெறப்படுகின்றன.

8. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் தொகுதிகளை விவரி.

1. ஆற்றல் மூலம் – சூரியன் ஒரு ஆற்றல் வளம்.

2. சூரியனிடம் இருந்து வரும் ஆற்றல் வளி மண்டலத்தால் கிரகிக்க அல்லது பிரதிபலிக்கப்படுகின்றது.

3. புவியை வந்தடையும் ஆற்றல் புவியின் தன்மையை பொருத்து மாறுபடுகின்றது.

4. மின் காந்த அலைகளின் வலம், தகவல் அல்லது புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது.

5. பெறப்பட்ட புள்ளி விவரங்கள் பல்வேறு பதிம எண்ணாக மாற்றப்படுகின்றன.

6. விவரணம் செய்தல் 7. பயன்பாடுகள் போன்றவையாகும்.

9. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை பயன்படுத்தும் முறையினை விவரி

1. பரந்து விரிந்த நிலப் பகுதியினை சுருக்கமாக அளிக்க.

2. அணுக முடியாத புவிப் பகுதியின் விபரங்களை அறிய.

3. புவிப் பகுதியின் விவரங்களை எளிதாகவும், வேகமாகவும் சரியாகவும் திரட்ட.

4. நாட்டு நலத் திட்டங்கள் தீட்டவும், தீட்டிய திட்டங்களை முழுமையாக செயல்படுத்த.

5. நிலவரை படங்களை மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் வரைய பயன்படுத்தப்படுகின்றது.

## பகுதி – ஈ

1. நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்கள் விவரி.

1. மொத்த நாட்டு உற்பத்தி 2. தலா வருமானம்

மொத்த நாட்டு உற்பத்தி:

ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

தலா வருமானம்

நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மக்கள் தொகையால் வகுத்தால் கிடைக்கும் ஈவு தலா வருமானம் ஆகும்.

8. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் யாது ?

1. நாட்டின் பொருளாதார நிலையை கணக்கிட.
2. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பிட.
3. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிட.
4. நாட்டு வருமானத்தில் மூன்று துறைகளின் பங்களிப்பை அறிய.
5. அரசு பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க கொள்கை வகுக்கவும், திட்டமிடவும் பயன்படுகின்றது.

3. நலம் நாடும் அரசின் பணிகளை விவரி.

1. பாதுகாப்பு பணிகள் – அந்நிய நாட்டு படையெடுப்பை தடுத்தல், உள்நாட்டு கலவரங்களைத் தடுத்தல்.
2. நிர்வாகப் பணிகள் – சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை மூலம் செயல்படுத்துதல்.
3. சமூக பாதுகாப்பு பணிகள் – எழைகள், உடல்நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
4. பொருளாதாரப் பணிகள் – வேளாண்மை, வணிகம் மற்றும் தொழிற் வளர்ச்சிக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்

1. உற்பத்தி முறை : நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் மூலம் கணக்கிடல்.
2. வருமான முறை : நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தைஅடிப்படையாகக் கொண்டு கணக்கிடல்.
3. செலவின முறை : நுகரும் பொருட்களின் செலவு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கணக்கிடல்.

## VII. கீழ்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக.

01. 1856 – பொது இராணுவ பணியாளர் சட்டம்
02. 1857 – முதல் இந்திய சுதந்திரப் போர், சிப்பாய் கலகம், பெரும் புரட்சி
03. 1858 – விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை
04. 1870 – ஜெர்மனி ஒருங்கிணைப்பு
05. 1878 – இந்திய ஆயுதச் சட்டம், வட்டார மொழி பத்திரிக்கை தடைச் சட்டம்
06. 1882 – முக்கூட்டு உடன்படிக்கை.
07. 1885 – இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம்
08. 1905 – வங்கப் பிரிவினை (அ) சுதேசி இயக்கம்
09. 1906 – முஸ்லீம் லீக் தோற்றம்
10. 1907 – சூரத் பிளவு, முக்கூட்டு நட்புறவு உடன்படிக்கை
11. 1909 – மிண்டோ–மார்லி சீர்திருத்தம்

12. 1911 – வங்காளம் இணைதல்

13. 1912 – முதல் பால்கன் போர்

14. 1914 – முதல் உலகப் போர் துவக்கம்

15. 1916 – தன்னாட்சி இயக்கம், லக்னோ ஒப்பந்தம்

16. 1917 – இரஷ்யப் புரட்சி, லூசிடானியா கப்பல் மூழ்கடிக்கப்படல், ஆகஸ்ட் அறிக்கை, அக்டோபர் புரட்சி

17. 1918 – முதல் உலகப் போர் முடிவு

18. 1919 – மாண்டேகு–செம்ஸ் போர்டு சீர்திருத்தம், ஜாலியன் வாலாபாக் படுகொலை, ரௌலட் சட்டம், பாரிசு அமைதி மாநாடு, வெர்செயில்ஸ் உடன்படிக்கை.

19. 1920 – ஒத்துழையாமை இயக்கம், கிலாபத் இயக்கம், சர்வதேச சங்கம்

20. 1922 – சௌரி சௌரா நிகழ்வு

21. 1923 – சுயராஜ்ய கட்சி தோற்றம்

22. 1927 – சைமன் குழு இந்தியா வருகை.

23. 1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு

24. 1930 – உப்புச் சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், முதல் வட்ட மேஜை மாநாடு, தண்டி யாத்திரை

25. 1931 – காந்தி இர்வின் ஒப்பந்தம், இரண்டாம் வட்ட மேஜை மாநாடு, சீனா மஞ்சூரியாவை கைப்பற்றுதல்

26. 1932 – மூன்றாம் வட்ட மேஜை மாநாடு, பூனா ஒப்பந்தம், வகுப்பு வாரி பிரதிநிதித்துவம், இராம்சே மெக்டொனால்டு

27. 1935 – இந்திய அரசுச் சட்டம்

28. 1939 – இரண்டாம் உலகப் போர் துவக்கம்

29. 1940 – ஆகஸ்ட் நன்கொடை, ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கை

30. 1941 – ஜப்பான் முத்து துறைமுகத்தை தாக்குதல், அட்லாண்டிக் சாசனம்

31. 1942 – கிரிப்ஸ் தூதுக் குழு, வெள்ளையனே வெளியேறு இயக்கம், இந்திய தேசிய இராணுவம்

32. 1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு, ஜெர்மனி சரணடைதல், ஹிட்லர் தற்கொலை, ஐ.நா. சபையின் தோற்றம்

33. 1946 – அமைச்சரவை தூதுக் குழு, இடைக்கால அரசு

34. 1947 – மவுண்ட் பேட்டன் திட்டம், இந்திய விடுதலை

35. 1950 – இந்தியா குடியரசு அடைதல்

36. 1954 – பிரெஞ்சுப் பகுதிகள் இணைவு

37. 1961 – போர்ச்சுக்கீசிய பகுதிகள் இணைவு


மாதிரி காலக்கோடு

கீழ்கண்டவற்றிற்கு காலக் கோடு வரைக.

1. சுதேசி இயக்கம்.
2. மிண்டோ – மார்லி சீர்திருத்தம்.
3. முதல் உலகப் போர் துவக்கம்
4. சௌரி சௌரா நிகழ்ச்சி
5. வெள்ளையனே வெளியேறு இயக்கம்.

அளவுத் திடடம்.

1 அலகு = 10 ஆண்டுகள்




VIII. கீழ்கண்டவற்றுள் ஐந்தினை வரைபடத்தில்குறி

(ஆசிய வரைபடத்தில் (அ) ஐரோப்பா வரைபடத்தில் (அ) உலக வரைபடத்தில் 2-ம் மற்றும் இந்திய வரைபடத்தில் 3-ம் தேர்ந்தெடு)

IX. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் ஐந்து இடங்கள் / பகுதிகள் குறியிட்டு ஒரிரு வாக்கியங்கள் எழுதுக.


(புவியியல் வரைபடத்தினை பொருத்தமட்டில் இடங்கள் அல்லது பகுதிகளை குறிப்பதுடன் அந்த இடங்கள் அல்லது பகுதிகள் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுத வேண்டும்)

ஆசிய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறித்துக் காட்டுக
1. மஞ்சூரியா 2. பெய்ஜிங் 3. பீகிங் 4. நான்கிங் 5. காண்டன் 6 ஹாங்காங்
7. பசுபிக் பெருங்கடல் 8. பார்மோசா 9. கொரியா 10. ஜப்பான் 11. சாகலின் தீவுகள்.




ஐரோப்பா வரைபடத்தில் கீழ் கண்டவற்றைக் குறித்துக்காட்டுக.

1. இத்தாலி 2. ஜெர்மனி 3. இங்கிலாந்து 4. பிரான்சு 5. ரஷ்யா 6. போர்த்துக்கல்
7. ஸ்பெயின் 8. சுவிட்சர்லாந்து.




உலக வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறித்துக்காட்டுக.

1. ஸ்காட்லாந்து 2. டானின் பார்க் 3. டான்சிக் 4 மார்ன் ஆறு 5. டார்டானலஸ்.





இந்தியா





வ
காஷ்மீர்
மேற்கு பாகிஸ்தான்
லாகூர்
அமிர்தசரஸ்
மீரட்
டெல்லி
ப்ரெய்லி
லக்னோ
கான்பூர்
சௌரி சௌரா
குவாலியர்
அலகாபாத்
ஆரா
ஜான்சி
கிழக்கு
பாகிஸ்தான்
பேரக்பூர்
ஜூனாகத்
டையூ
சூரத்
டாமன்
தண்டி
பூனா
ஹைதராபாத்
கோவா
சென்னை

இந்தியா - நிலத்தோற்றங்கள்





வ
சிந்து
தார்
பாலைவனம்
ராண் ஆஃப்கட்ச்
கட்ச் வளைகுடா
நர்மதா
தபதி
காம்பே
வளைகுடா
பிரம்மபுத்திரா
கங்கை
சுந்தரவனம்
கோதாவரி
கிருஷ்ணா
காவிரி
பாக்நீர்சந்தி
மன்னார் வளைகுடா



வ
பாமீர்முடிச்சு
காரகோரம்
K2 (or) காட்வின்ஆஸ்டின்
லடாக்
கைலாஷ்
ஆரவல்லிமலை
சிவாலிக்
எவரெஸ்ட்
பட்காய்குன்று
மாளவபீடபூமி
சோட்டா நாகபுரி பீடபூமி
விந்தியமலை
சாத்பூராமலை
தக்காண பீடபூமி
மேற்கு தொடர்ச்சி மலை
கிழக்குதொடர்ச்சிமலை
நீலகிரி



வ
குறைவான மழைபெறும் பகுதி (காஷ்மீர்)
குறைவான மழைபெறும் பகுதி (மேற்கு ராஜஸ்தான்)
அதிக மழைபெறும் பகுதி (கிழக்கு இமயமலையின் தெற்கு சரிவு)
மேற்குதொடர்ச்சி மலை
மிதமான மழை பெறும் பகுதி மத்திய இந்தியா
அதிகமழை பெறும் பகுதி (மேற்குதொடர்ச்சி மலையின் மேற்கு சரிவு)
தென் மேற்கு பருவக்காற்று வீசும் திசை





வ
ஜம்மு & காஷ்மீர்
மலைமண் (அல்லது) மலைத்தாவரங்கள்
அருணாசலப் பிரதேசம்
சிக்கிம்
இராஜஸ்தான்
பாலைமண் (அல்லது) பாலைவனத்தாவரங்கள்
குஜராத்
மகாராஷ்டிரா
கரிசல்மண் (அல்லது) பருத்தி விளையும் பகுதிகள்
வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை
கிழக்கு தொடர்ச்சி மலையின் உச்சிகள்
சரளை மண் காணப்படும் பகுதிகள் (மேற்கு தொடர்ச்சி மலையின் சில பகுதிகள்)



வ
வட இந்தியச் சமவெளி
(வண்டல் மண்)
தேயிலை விளையும் பகுதி
(அஸ்ஸாம்)
சணல் விளையும் பகுதி (மேற்கு வங்காளம்)
வண்டல்மண் காணப்படும் பகுதிகள்
(கிழக்கு கடற்கரை சமவெளி)
காபி விளையும் பகுதி
(கர்நாடகா)
இரப்பர் மற்றும் வாசனை திரவியங்கள் விளையும் பகுதி(கேரளா)


இந்தியா - இயற்கைத் தாவரங்கள்.






வ
பஞ்சாப்
ஹரியானா
உத்தரப் பிரதேசம்
மேற்கு வங்காளம்
ஒரிஸா
ஆந்திரப் பிரதேசம்
- நெல் விளையும் பகுதிகள்
- கரும்பு விளையும் பகுதிகள்
- கோதுமை விளையும் பகுதிகள்
தமிழ்நாடு


இந்தியா - கனிம வளங்கள்



இந்தியா - தொழிலகங்கள்



இந்தியா - போக்குவரத்து.



நன்றி :
திரு.பொன்.குமார் அவர்கள்
முதன்மைக்கல்வி அலுவலர்.
வேலூர்

www.kalvisolai.com